# தொண்டா-ஜே.ஆர் ஆலோசனை

Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

ஈழமுரசு

முரசு 2 19-12-85 வியாழன் ( மார்கழி 4 ரபீயு ஆகிர் 6) முழக்கம் 314

அமைச்சர் எஸ். தொண்டமானும், ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவும் நேற்று இருதடவைகள் தனிமையில் கூடி மந்திராலோசனை நடத்தினர். மலையக மக்கள் பிரஜாவுரிமைப் பிரச்சினை தொடர்பாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தைப்பொங்கல் தினத்தன்று ஆரம்பிக்கவிருக்கும் பிரார்த்தனை இயக்கம், இனப்பிரச்சினைத் தீர்வு ஆகியவை தொடர்பாக இவர்கள் பேசினர். முதற்சந்திப்பு நேற்றுக்காலை ஜனாதிபதியின் இல்லத்தில் நிகழ்ந்தது. இதன்பின்னர் அமைச்சரவைக் கூட்டத்துக்கு அமைச்சர் தொண்டமானையும் தமது காரிலேயே ஜனாதிபதி ஏற்றிச் சென்றார். அமைச்சரவைக் கூட்டத்திலும் இவ்விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டதாகத் தெரியவருகின்றது இவ்வருட இறுதிக்குள் சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு காணவேண்டுமென அமைச்சர்கள் அனைவரும் ஏகோபித்த கருத்தைத் தெரிவித்தனராம். அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னரும் அமைச்சர் தொண்டமானும் ஜனாதிபதியும் தனிமையில் சந்தித்து சுமார் அரைமணிநேரம் பேசினார்கள்.

★ யாழ்ப்பாண மாவட்டத்தில் முகாமிட்டுள்ள —

# படையினர் கட்டுப்பாட்டுடன் இருப்பின் பிரச்சினை ஏற்படாது!

## யாழ்ப்பாணச் சம்பவ அறிக்கையில் கண்காணிப்புக் குழு சுட்டிக்காட்டியுள்ளது

(கொழும்பு)

யாழ்ப்பாண மாவட்டத்தில் முகாமிட்டுள்ள பாதுகாப்புப் படையினர், இப் பகுதியிலுள்ள பொதுமக்களுடன் நடந்துகொள்ளும் முறைகளில் அதிக ஒழுக்கத்தையும், கட்டுப்பாட்டையும் பேணி வர வேண்டும் என்று படை அதிகாரிகள் கட்டுப்பாடு விதித்திருந்தால் இங்கு ஏற்பட்ட சில பிரச்சினைகள் தவிர்க்கப்பட்டிருக்கக் கூடுமென்று யாழ்ப்பாணச் சம்பவங்கள் தொடர்பான தனது அறிக்கையில் யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழு சுட்டிக் காட்டியுள்ளது.

இந்த அறிக்கையைத் தயாரிக்கும்போது சிறுபான்மையினரான குழு உறுப்பினரொருவர் பல விடயங்களில் கருத்து வேறுபாடு கொண்டிருந்ததை 'ஈழமுரசு' முன்னரே அறிவித்திருந்தது.

குறிப்பிட்ட அந்த உறுப்பினர் தனியான அறிக்கையொன்றையும் அரசாங்கத் திடம் கையளிக்கத் தயாரித்து வைத்திருந்தார்.

இறுதி நேரத்தில் குறிப்பிட்ட உறுப்பினரின் சில முக்கிய கருத்துக்களையும் குழுவின்

...6ம் பக்கம் பார்க்க

## அமைச்சர் சென்னையில்

(சென்னை)

இலங்கையின் பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராஜதுரை சென்னைக்கு விஜயம் செய்துள்ளார்.

## வவுனியாவில் நேற்றுக் காலை

## லொறிச்சாரதி, கிளீனருக்கு கத்திவெட்டு; பணம்கொள்ளை

(வவுனியா)

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு ஐஸ் ஏற்றி வந்த லொறி ஒன்று நேற்றுக் காலை வவுனியா மூன்றுமுறிப்பு பிள்ளையார் கோவிலடியில் வழிமறிக்கப்பட்டு சாரதியும் கிளீனரும் கத்தியால் வெட்டப்பட்டனர்.

இவர்களிடமிருந்து எண்ணாயிரம் ரூபா பணம், மற்றும் பல பொருட்களும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. துப்பாக்கி, கத்திகள் சகிதம் நால்வர் இதனைச் செய்ததாக வவுனியா பொலிஸில் புகார் செய்யப்பட்டது.

சாரதி சிற்றம்பலம் சிவஞானசுந்தரம் (26) கிளீனர் கந்

.. 6ம் பக்கம் பார்க்க

# அடுத்த பேச்சு கொழும்பில்; தமிழர் கூட்டணிக்கு அழைப்பு!

இலங்கையின் இனப்பிரச்சினை பற்றிய பேச்சுவார்த்தையை தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர்களுடன் நடாத்த இலங்கை அரசு முயற்சி செய்வதாக வெரித்தாஸ் வானொலி நேற்றிரவு அறிவித்தது.

இப் பேச்சுவார்த்தைக்கான அழைப்பு தூதுவர் பெர்னாட் திலகரட்ண மூலம் கூட்டணித் தலைவர்களுக்கு விடுக்கப்பட்டதாகவும், அதன்படி பேச்சுக்களை கொழும்பிலேயே நடாத்த இலங்கை அரசு ஆராய்ந்து வருவதாகவும் வெரித்தாஸ் அறிவித்தது.

தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் 'புளொட்' இயக்கமும் கலந்து கொள்ளும் எனவும் தெரிவித்த அந்த செய்தியறிக்கையில் அமைச்சர் லலித் அத்துலத் முதலி புதுடில்லிக்கு பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளமாட்டார் என இலங்கை அரசு தெரிவித்ததாகவும் கூறப்பட்டது.

தமிழீழத்துக்கு மாற்றாக எதனையும் பெறுவது கற்பனைக்கு சமமாகும் என ஈழம் தேசிய விடுதலை முன்னணியினர் தெரிவித்ததாகவும் அதில் கூறப்பட்டது.

## இராணுவத் தாக்குதலினால் வீரசிங்கம் மண்டபம் சேதம்

ராணுவத்தினர் நடத்திய தாக்குதலினாலேயே யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபம் சேதமடைந்ததாக யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு தனது அறிக்கையில் தெரிவித்தது.

சம்பவ தினத்தன்று கோட்டைக்கு வெளியே முதலில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகவும் இனம் தெரியாதவர்களே இத்தாக்குதலை நடத்தியதாகவும் குழு மேலும் தெரிவித்துள்ளது.

இதற்குப் பதிலாக கோட்

... 6 ஆம் பக்கம் பார்க்க

## கச்சேரி ஓய்வூதியம் சனி, ஞாயிறில்

இலங்கை வங்கி, கச்சேரிக் கிளையில் ஓய்வூதியம் பெற்று

... 6ம் பக்கம் பார்க்க

## யாழ்ப்பாணத்துக்கு இருபது யுத்தவிமானங்கள் சென்றன ஆனால் தூதரகம் இதனை மறுக்கிறது

(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் சுமார் இருபது விமானங்களை யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு சென்றது என்றும் இவற்றில் சில விமானங்களை மலேஷியக் கூலிப் படையினர் செலுத்திச் சென்றார்கள் என்றும் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுகளை இலங்கையில் உள்ள மலேஷிய உயர் ஸ்தானிகராலயம் மறுத்துள்ளது.

சென்னையில் உள்ள ஈ.பி ஆர். எல். எப். இயக்கத்தால் வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றை மேற்கோள்காட்டி பி. ரி. ஐ. செய்திஸ்தாபனம்

...6ம் பக்கம் பார்க்க

## ராணுவ முகாம்களை ஒன்றாக பலாலியில் இணைக்கலாமா

மக்கள் பெருந் தொகையாக வாழும் பகுதிகளில் ராணுவ முகாம்கள் அமைந்துள்ளதால் ஏற்படும் விளைவுகளையிட்டு யாழ்ப்பாணம், வல்வெட்டித்துறை, பருத்தித்துறை பிரஜைகள் குழுக்கள் திருப்பத்திரும்ப செய்த முறைப்பாடுகளைப் பற்றி கண்காணிப்புக்குழு அதன் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

மக்கள் அதிகமாக வாழும் பகுதிகளிலுள்ள ராணுவ முகாம்களை அகற்றி பலாலியிலுள்ள பிரதான முகாமுக்கு மாற்றப்படுவது இதற்கு ஒரு தீர்வாக அமையும் என பிரஜைகள் குழுக்கள் தெரிவித்

...6ம் பக்கம் பார்க்க

## தமிழ் பாடசாலை கட்டடம் தகர்ப்பு

(மட்டுநகர்)

மட்டுநகர் செங்கலடி பதுளைப் பாதையிலுள்ள இத்துல்வேவ என்ற இடத்திலுள்ள தமிழ் பாடசாலைக் கட்டடமும், தமிழர் குடியேற்றப்பகுதிக் கட்டடமும் இனம் தெரியாதவர்களால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டன.

## போதைவஸ்து கடத்திய இருவருக்கு மரணதண்டனை!

மலேசியாவில் போதைவஸ்து கடத்திய இரு அவுஸ்திரேலிய பிரஜைகளுக்கு வழங்கப்பட்ட மரணதண்டனையை அங்குள்ள உயர் நீதிமன்றம் நேற்று ஊர்ஜிதம் செய்தது.

இந்த இருவரும் இருவருடங்களுக்கு முன்னர் பினாங் விமான நிலையத்தில் நூற்றெண்பது கிலோ கிரோயின் கடத்தியபோது கைதுசெய்யப்பட்டு ஏற்கனவே மரண தண்டனையும் வழங்கப்பட்டிருந்தது. இத்தீர்ப்பை எதிர்த்து இவர்கள் மேல்முறையீடு செய்திருந்தனர்.

இத்தீர்ப்பைத் தொடர்ந்து

...6ம் பக்கம் பார்க்க

தமிழ்ப்பகுதிகளில் கூடுதலாக விற்பனையாவது ஈழமுரசு

## கூட்டுறவு ரீதியிலான செயற்பாடு

(சுண்டுக்குளி)

வட இலங்கை ஹோமியோபதி வைத்திய சங்கம் கூட்டுறவு ஹோமியோபதி வைத்திய சாலை ஒன்றை நிறுவவுள்ளது.

இதற்கான அங்கீகாரம் வழங்குமாறு சுகாதார அமைச்சரிடம் ஹோமியோபதி வைத்திய சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது சம்பந்தமாக வட இலங்கை ஹோமியோபதி வைத்திய சங்கம் சுகாதார அமைச்சருக்கு மகஜரொன்றை அனுப்பி வைத்துள்ளது.

அம்மகஜரில் பத்து வருட காலத்திற்கும் அதிகமாகக் ஹோமியோபதி வைத்தியம் புரிந்து வருபவர்களுக்கு நிரந்தரப் பதிவு வழங்கவேண்டுமென்றும், முன்னைய காலங்களைப் போன்று சங்கத்தின் மூலம் மருந்துகளைப் பெற்றுக் கொள்ள அனுமதி அளிக்க வேண்டுமென்றும், ஹோமியோபதி வைத்தியக் கல்லூரி ஒன்றினை நிறுவவேண்டுமென்றுப் சுகாதார அமைச்சரிடம் கோரப்பட்டுள்ளது.

## பாராட்டு

(வேலணை)

அண்மையில் நடைபெற்ற ஐந்தாம் தரபுலமைப் பரிசு பரீட்சையில் வேலணை சைவப்பிரகாச வித்தயாசாலையில் இருந்து ஐந்து மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

வேலணை, புங்குடுதீவு வட்டாரக்கல்வி அதிகாரி பிரிவில் ஆகக்கூடிய மாணவர்கள் தெரிவாகி இருப்பது இப்பாடசாலையிலேயாகும்.

மேற்படி பாடசாலை அதிபரினதும், மற்றும் ஆசிரியர்களதும் திறமை வாய்ந்த கற்பித்தலே இச்சித்திக்கு காரணமென இப்பகுதி பெற்றோர்கள்கருத்து தெரிவிப்பதுடன் அவர்களது சேவையையும் பாராட்டுகின்றனர்.

அதிகாலையில்

# வயலுக்கு நீர்ப்பாய்ச்சிய பின் திரும்பியவர் மீதும் ஐயம்

(ஒட்டுசுட்டான்)

சமனங்குளத்தில் தனது வயலுக்குக் குளத்திலிருந்து நீர்ப் பாய்ச்சிவிட்டு வந்த நபர் ஒருவரை ரோந்துச் சேவையில் ஈடுபட்டிருந்த ஆயுதப்படையினர் அதிகாலை இரண்டு மணி போல் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்து நெடுங்கேணி வீதி வழியாகக் கொண்டு சென்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்டவர் எந்த இராணுவ முகாமில் காவலில் வைக்கப்பட்டுள்ளார் என்ற தகவல் தெரியாததால் அவரைத் தேடும் முயற்சியில் உறவினர் ஈடுபட்டுள்ளதாக அறியவந்துள்ளது.

இதற்கிடையில் வன்னிப் பகுதியில் வயலுக்கு நீர்ப் பாய்ச்சுவோர் ஒரு குறித்த நேரத்தில் மட்டும் தமது வயலுக்கு நீர்ப்பாய்ச்சலாம் என்றும் அந்த நேரத்தை அவர் தவறவிட்டால் அடுத்ததவணை நேரம் வரும்வரை அவர் காத்திருக்க வேண்டும் என்றும் அதனால் தான் அந்த நபர் தனக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தில் வயலுக்குள் நீர்ப்பாய்ச்ச சென்றாரென்றும் விவசாயக் குழுப் பேச்சாளர் ஒருவர் கூறினார்.

## பாவனையாளர் பாதுகாப்பு சங்கங்கள்

(புலோலி)

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பகுதியில் ஆறு கிராம சேவை அலுவலர் பிரிவில் பாவனையாளர் சங்கங்கள் அமைக்கப்பட்டு விட்டதாக கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவு விலைக்கட்டுப் பாட்டுப் பரிசோதகர் திரு.த. சிவேஸ்வரதம்பி தெரிவித்துள்ளார்.

அல்வாய் தெற்கு பாவனையாளர் சங்க தலைவராக திரு. எஸ். செல்வராசாவும், வல்வெட்டி பாவனையாளர் சங்கத் தலைவராக திரு. ந. இராமசாமியும், உடுப்பிட்டி பாவனையாளர் சங்கத் தலைவராக திரு. பொ. வேலுப்பிள்ளையும், கரணவாய் தெற்கு பாவனையாளர் சங்கத்தலைவராக திரு க. இராசசிங்கமும், துன்னாலை தெற்கு பாவனையாளர் சங்கத் தலைவராக திரு. வி. வி தாமுவும், புலோலி தெற்கு பாவனையாளர் சங்கத்தலைவராக திரு. கே. வீணுகோபாலும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## பஸ்சேவை இல்லாமல் பரிதவிப்பு

(ஆழியவளை)

கடந்த பல மாதங்களாக பருத்தித்துறை ஆழியவளை பஸ் சேவை நடைபெறுவதில்லை. இதற்கான காரணத்தையும் அதிகார பீடம் தெரிவிக்கவில்லை. வடமராட்சிக் கிழக்கில் உள்ள பின்தங்கிய கிராமங்களான சுண்டிக்குளம், போக்கறுப்பு, கட்டைக்காடு, முள்ளியான் மக்கள் பல மைல்கள் ஆழியவளைக்கு நடந்து வந்து, பஸ் சேவை நடைபெருத காரணத்தினால் மன விரக்தி அடைகின்றனர்.

பருத்தித்துறை இ. போ. ச. சாலை அத்தியட்சகர் இச்சேவை 1986ம் ஆண்டு தொடக்கமாகவாவது ஒழுங்காக நடக்க நடவடிக்கை எடுப்பார் என்று மக்கள் எதிர் பார்க்கின்றனர்.

## அதிர்ச்சிமேல் அதிர்ச்சி

(வேலணை)

இலங்கைத் துறைமுக அதிகார சபையின் திருகோணமலை துறைமுகத்தில் கடமையாற்றி அண்மையில் நடைபெற்ற அசம்பாவிதங்களினால் தமது மனைவி, பிள்ளைகளை விட்டு தமது சொந்த ஊராகிய வேலணைகு தப்பியோடி வந்த நபரொருவருக்கு மேற்படி அதிகார சபையினால் வேலையினின்றும் நீக்கப்பட்டு விட்டதாக தெரிவித்து கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

மேற்படி நபர் தகுந்த ஆதாரங்களை அனுப்பியும் ஒரு பலனும் கிடைக்கவில்லையாம். தற்போது வேலையினின்றும் நீக்கப்பட்டதுடன் மனைவி, பிள்ளைகளின் நிலை என்ன என்பது பற்றியும் தெரியாது அங்கலாய்க்கின்றார். இப்பரிதாப நிலைக்கு ஆளாகியவர் வேலணை தெற்கு அம்மன் கோவிலடியைச் சேர்ந்தவராகிய திரு. கே. நடராசா என்பவராவார்.

## பிறந்தநாள் வாழ்த்து

❋ மானிப்பாய் மேற்கு, லக்ஷ்மி காந்தன் கலாநிதி தம்பதியின் மகன் நிவித்னன் இன்று தனது ஐந்தாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

❋ கண்டாவளை, சிவராசா இராசலட்சுமி தம்பதியின் மகன் நிமலன் இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

❋ மாதகல், யோகரட்ணம் சரோ தம்பதியின் மகன் நிஸாந்தன் இன்று தனது மூன்றாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

❋ யாழ். நாச்சிமார் கோவிலடி, அருந்தவராஜா புஷ்பராணி தம்பதியின் மகன் வசிகரன் இரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

❋ பளை தம்பலகாமம், செல்வரத்தினம் அருந்தவமலர் தம்பதியின் மகள் வில்சிகா இரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

❋ யாழ். கொட்டடி, தம்பிரத்தினம் ரதி தம்பதியின் மகன் மதனகுமார் இரண்டாவது பிறந்த நாளை இன்று கொண்டாடுகிறார்.

## கமலநாதன் குழு வெற்றி

(புலோலி)

வலி. கிழக்கு (வடபகுதி) அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க இயக்குநர் சபைத் தெரிவுத் தேர்தலில் கடந்த மூன்று வருடங்களாக இயக்குநர் சபைத் தலைவராகக் கடமையாற்றிய லயன் தி. கமலநாதன் தலைமையிலானகுழுவே அமோக வெற்றியீட்டி எல்லா இயக்குநர்சபை உறுப்பினர் பதவிகளையும் கைப்பற்றிக் கொண்டது.

இப் பலநோக்குக் கூட்டுறவுச்சங்க இயக்குநர் சபைத் தெரிவுத் தேர்தலில் லயன் தி. கமலநாதன் தலைமையிலான குழுவும், டாக்டர். எஸ் இராசலிங்கம் (அச்சுவேலி வைத்தியசாலை) தலைமையிலானகுழுவும் போட்டியிட்டன. போட்டிகள் மிக விறுவிறுப்பாக இருந்தபோதும் இறுதியில் லயன் கமலநாதன் தலைமையிலான குழுவே ஏழு இயக்குநர்சபை உறுப்பினர் பதவிகளையும் கைப்பற்றியது.

இத்தேர்தல் யாழ். மாவட்ட சிரேஷ்ட கூட்டுறவு ஆக்கஉதவி ஆணையாளர் திரு எஸ். சண்முகலிங்கம், கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் திரு எஸ். வேலாயுதபிள்ளை ஆகியோர் கண்காணிப்பில் நடைபெற்றது.

இத்தேர்தலில் 22கிளைகளைச் சேர்ந்த 100 பொதுச்சபைஉறுப்பினர்கள் வாக்களித்தனர். வெகுவிரைவில் இயக்குநர் சபைத்தலைவர் தெரிவு நடைபெறவுள்ளதாக திரு. கமலநாதன் தெரிவித்தார்.

## சாரணர் நிதிசேகரித்து உதவுவர்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் முழங்காவில் பிள்ளையார் கோயில் வீதியில் வைத்து இராணுவத்தால் சுட்டுக் கொலை செய்யப்பட்ட ஐவரில் மூவர் முழங்காவில் அரசினர் பாடசாலையில் படிக்கும் பிள்ளைகளின் தந்தையராவர்.

கணவனை இழந்து வறுமையில் வாடும் விதவையர்க்கும் பிள்ளைகளுக்கும் உதவுமுகமாக முழங்காவில் அரசினர் பாடசாலை சாரணத் துருப்பினர் சாரண ஆசிரியர் திரு. பா. சிவராசா தலைமையில் இம்மாதம் 20ம் திகதி தொடக்கம் மூன்று நாட்களுக்கு உண்டியல்மூலம் நிதிசேகரிப்பு இயக்கம் ஒன்றை நடாத்த உள்ளார்கள்.

இதன் மூலம் பெறப்படும் பணம் முழுவதும் கணவனை இழந்த விதவையர்க்குப் பகிர்ந்தளிக்கப்படும் என்றும் இதற்குப் போதுமான ஒத்துழைப்பு நல்குமாறும் பாடசாலை அதிபர் பெற்றோரைக் கேட்டுள்ளார்.

## கல்வியதிகாரி பெருமை மகிழ்ச்சி

(நல்லூர்)

"கடந்த சில வருடங்களாக இப்பாடசாலை அடைந்து வரும் முன்னேற்றம் குறித்து மிக்க மகிழ்ச்சியடைகிறேன், சைவத்தையும் தமிழ் மரபையும் இப்பாடசாலை ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பேணிவளர்த்து வருவது பெருமைக்குரியது. இப்பாடசாலை மேலும் வளர்ச்சியடைய என்னுலான உதவிகளைச் செய்ய ஆயத்தமாக இருக்கிறேன்."

இவ்வாறு நல்லூர் இந்து தமிழ்ப் பெண் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழாவிலும், பெற்றோர்தின விழாவிலும் பிரதமஅதிதியாகக் கலந்து கொண்ட நல்லூர் வட்டாரக் கல்வி அதிகாரி திரு சு. சிவவிணயகமூர்த்தி பேசுகையில் குறிப்பிட்டார்.

பாடசாலை அதிபர் திருமதி இ. ஜெகானந்தகுரு தலைமையில் நடை பெற்ற இவ்விழாவில் நல்லூர் ஆதீன மடாதிபதி குரு மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரை நிகழ்த்தினர்.

திருமதி தனலட்சுமி சிவவிணயகமூர்த்தி பரிசில்கள் வழங்கினர். அதனைத் தொடர்ந்து மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

## உஷார் நடவடிக்கை

(சரசாலை)

சரசாலை கண்காணிப்புக் குழுவினர் இரவு பத்துமணி முதல் காலை நாலு மணிவரை கிராமத்தை காவல் புரிந்துவருகின்றார்கள் வீதிகளுக்கு தடைகள் போட்டு பிற இடங்களில் இருந்து சரசாலையல் செல்பவர்களையும், வாகனங்களையும் விசாரணை செய்து தான் சரசாலையை கடந்து செல்ல அனுமதிக்கின்றனர். இவர்களின் சேவையை சரசாலையில் உள்ள பலரும் பாராட்டியுள்ளனர்.

## மருந்துகள் யாழ். வந்தன

(வேலணை)

யாழ்ப்பாண மாவட்ட ஆயுள்வேத வைத்திய சாலைகளுக்கு வழங்குவதற்கென ஆயுள் வேத இலாகாவினுல் காவின்னையில் இருந்து அனுப்பி வைக்கப்பட்ட பெருந்தொகையான மருந்துகள் யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபையின் நீர் வேலி உப அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

இம் மருந்துகளை யாழ்மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு உப அலுவலகமும் உடுவில் உப அலுவலகத்திற்கு சென்று பெற்றுக் கொள்ளுமாறு யாழ் மாவட்ட உப அலுவலக அலுவலர் திரு. பாலசிங்கம் சுற்று நிருப மூலம் மேற்படி உப அலுவலகங்களைக் கேட்டுள்ளார்.


## புனித விடுதலை இயக்கங்களுக்கு ஓர் வேண்டுகோள்

13-12-85 வெள்ளிக்கிழமை இரவு 7 மணியளவில் நானும், எனது மகனும் எமது 82 ஸ்ரீ 5032 CD-70 நீலநிற ஹொண்டா மோட்டார் சைக்கிளில் பெருங்குளம் - மட்டுவில் தெருவால் வந்து கொண்டிருக்கும் பொழுது 3 இனந்தெரியாத இளைஞர் எம்மை வழி மறித்து தமது கார் றிப்பயர் செய்வதற்கு எமது மோட்டார் சைக்கிளைத் தருதவுமாறும், 1/2 மணி நேரத்தில் திருப்பித் தருவதாகவும், கூறி எடுத்துச் சென்றார்கள். சுமார் 2 மணி நேரம் நாம் அவ்விடத்தில் காத்திருந்தும், மோட்டார் சைக்கிள் திருப்பித் தரப்படவில்லை. இதுவரை மோட்டார் சைக்கிள் எங்களுக்குக் கிடைக்கவில்லை. யான் ஒரு நோயாளி என்ற முறையில், இந்த மோட்டார் சைக்கிள் எங்களுக்கு மிக அத்தியாவசியம் ஆனது. ஆகையால், எங்கள் மோட்டார் சைக்கிளைத் திரும்பவும் பெற்றுத் தருமாறு, புனித விடுதலை இயக்கங்களை தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

"பத்மபதி"
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

இப்படிக்கு
திருமதி ப. பத்மநாதன்
(R/13899)



## "தொழிற் பயிற்சி"

உடன் வேலைவாய்ப்புபெற அரிய சந்தர்ப்பம்

- ரெலிவிசன், வீடியோ டெக் றிப்பியறிங் சகல இன ரெலிவிசன் டெக் திருத்தும் முறை செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்
- Computer Programming Basic - Cobol பயிற்சியளிக்கப்படும்
- எலக்ரிக்கல் வயறிங்
- வெல்டிங்
- Diploma In Draughtsmanship
- மோட்டார் றீவைண்டிங், மோட்டர் ரான்ஸ்போமர் வேறு மின்சார பொருட்களும் றீவைண்டிங் பயிற்சியளிக்கப்படும்.

பயிற்சிகள் ஆரம்பம்: 24.12.85

**JAFFNA TECHNICAL INSTITUTE**

ஸ்ரான்லி வீதி, (றெயில்வே கடவை யருகாமை) யாழ்ப்பாணம்.

விக்கினேஸ்வராக் கல்லூரிவீதி, பெற்றோல் செற் முன்வீதி, நெல்லியடி, கரவெட்டி.

141, கண்டி வீதி, (யூனியன் பேக்கரி யருகாமை) சாவகச்சேரி.

R/13896

ஈழமுரசு

19-12-85



## மரங்களை நாட்டுவதால் மட்டுமே பணி பூர்த்தியாவதாக கருதுதல் அறிவுடைமையல்ல

(வேலணை)

"மரங்களை நாட்டி வைத்து அதனை மரம் நாட்டு விழாவாக மட்டும் கொண்டாடினால் போதாது. மரங்களைப் பேணி, பாதுகாத்து அவைகளை வளரச் செய்தால்தான் மரம்நாட்டு விழாச் செய்ததன் பலனை அடையமுடியும். மரங்கன்றுகளை நாட்டிவிட்டு எமது கடமை முடிந்துவிட்டதாக கருதினால் அதனால் ஒருபலனும் கிடைக்கமாட்டாது."

மேற்கண்டவாறு வேலணை வங்களாவடி சரஸ்வதி வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்ற மரம் நாட்டு விழாவில் உரையாற்றிய வேலணை விவசாயப் போதனாசிரியை திருமதி. புஷ்பலக்சுமி சுப்பிரமணியம் தெரிவித்தார்.

திரு. ஆ. அருமைநாயகம் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில்:- மரம், செடி, கொடிகளிலிருந்து நாம் எத்தனையோ பலன்களைப் பெற முடியும். இதனை நமது மக்கள் உணருகின்றார்கள் இல்லை. ஒவ்வொரு வீட்டிலும், பொது இடங்களிலும் ஆலய முன்றல்களிலும் நிழல் தரு மரங்களையும், உணவிற்கான செடி கொடிகளையும் நாட்ட வேண்டும் என்றார்.

தொழிலதிபர் திரு. கா. கனகராசா பேசுகையில், "நாம் நமது சிறார்களுக்கு சிறுவயதிலிருந்தே நற்கருத்துக்களையும், நன்நெறிகளையும், போதித்து வர வேண்டும். அப்போதுதான் அவர்கள் நற்பிரஜைகளாக வாழ முடியும். பாடசாலைகள் போன்ற கல்வி ஸ்தாபனங்களில் மரம் நடுவதன் மூலம் பாடசாலை மாணவர்களும் பயன் பெறுவதுடன் மரம்நடும் இயக்கத்திலும் ஈடுபட வாய்ப்புண்டு" என்றார்.

இளைப்பாறிய ஆசிரியர் சோ. கந்தையா உரையாற்றுகையில்:- "மரங்களின் உற்பத்தி குறைவடைந்து கொண்டு போனால் நமது நாடு ஒரு காலத்தில் பாலைவனமாக மாறக்கூடிய ஆபத்துள்ளது. இதனை நாம் நன்குணர்ந்து இப்போதிருந்தே மரங்களை நாட்டுதல் வேண்டும். நாம் செய்யும் தவறு பிற்கால சந்ததியினரை பாதிக்கக்கூடியதாக இருக்கக்கூடாது" என்றார்.

கல்லூரி முன்றலில் திரு கா. கனகராசாவினால் மரமொன்று நாட்டிவைக்கப்பட்டது. இக்கல்லூரிக்கென காந்திசிலை யொன்றும் ஏனைய நன்நூல்களும் அவரால் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

## படை வீரருடன் இக்குடும்பம் கழித்த அந்த ஒருநாள் இரவு

(ஒட்டுசுட்டான்)

முல்லைத்தீவு இராணுவ முகாமில் இருந்த பாதுகாப்புப் படையினர் ஒட்டுசுட்டானுக்கு வருவதற்காக முல்லைத்தீவுப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்குச் சொந்தமானதும் மா மூடைகளுடன் கடந்த புதன்கிழமை சங்க வளவுக்குள் நின்றதுமான லொறியைப் பயன்படுத்தியுள்ளனர். சாரதியையும் சேர்த்துதமக்குப் பாதுகாப்புக்காக அருகில் இருந்த ஒரு குடும்பத்தையும் கூட்டிக் கொண்டு இரவு 8 மணிக்கு ஒட்டுசுட்டானுக்கு அவர்கள் வந்ததாகவும், இரவு அக்குடும்பத்தைப் பாதுகாப்பாகவும் அன்பாகவும் இராணுவ முகாமில் வைத்து, வியாழக்கிழமை காலை அக்குடும்பத்தையும் மா மூடை கொண்ட லொறியையும் முல்லைத்தீவுக்குத் திருப்பி அனுப்பியதாகவும், தெரிவிக்கப்படுகிறது.

லொறியுடன் கூட்டிக் கொண்டு வந்த குடும்பத்தில் இரண்டு சிறுவர்களும் இருந்ததாகவும் தெரிய வருகிறது. முல்லைத்தீவிலிருந்து புறப்படும் பொழுது தம்முடன் கூட வந்த பாதுகாப்புப் படையினர் சத்த வெடி யொன்று போட்டுக் கொண்டு புறப்பட்டதாகவும் அறிய வருகிறது.

இதைத் தொடர்ந்து அப்பகுதியில் உள்ள மக்கள் இரவு, நேரத்துடனேயே தமது வீடுகளுக்குள் அடங்கி விடுவதாகவும் தெரிய வருகிறது.

### தேவைகள் பூர்த்தி

(வேலணை)

வேலணை சேர். வைத்திலிங்கம் துரைச்சாமி மத்திய மகாவித்தியாலய அதிபரினதும், பெற்றோர் ஆசிரியர் சங்கத்தினதும் முயற்சியினால் கல்லூரியின் முன்பக்கத்துக்கு மதில் கட்டப்பட்டு இரட்டை கேற்றும் போடப்பட்டுள்ளது.

A/L 86 Aug.

கலை, வர்த்தக வகுப்புகளுக்கான

துரித மீட்டல் வகுப்புகள்

திட்டமிடப்பட்ட முறையில் பயிற்சி

N ES தரப்படமாட்டா

முற்றுக அச்சடிக்கப்பட்ட இலவச பாடக் குறிப்புகள்-

5 வருட வினுக்களுக்கு-விடை (Paper Class)

யாழ் நகரின் பிரபல ஆசிரியர்கள்:-

| | | |
|---|---|---|
| பொருளியல் | :- | திரு. கிருஷ்ணனந்தன் |
| கணக்கியல் | :- | திரு. வன்னியசிங்கம் |
| வர்த்தகம் | :- | திரு. தேவா, திரு. ரட்ணம் |
| அளவையியல் | :- | திரு. யுகபாலசிங்கம் |
| தமிழ் | :- | திரு. நாகேஸ்வரன் |
| இந்து நாகரிகம் | :- | திரு. வேதா |

மற்றும் பலர்

ஆரம்பம்: 1-1-86 (காலை 10 மணி)

விபரங்களுக்கு: நேரில் / தபாலில்

ASTAN INSTITUTE

166/I, Hospital Road, Jaffna.

## வை.எம்.சி.ஏ. இயக்கம் உருவான வரலாறு புரிந்து, இணைந்து உழைத்தால் உயர்வுண்டு

(நல்லூர்)

"தொழிற்சாலைகளில் எட்டு மணிநேரம் வேலை செய்த பின்னர் வேலைத்தலங்களை விட்டு வெளியேறி நகரங்களில் தமது நேரத்தை வீணான காரியங்களில் செலவிட்ட இளம்பெண்களையும், ஆண்களையும் ஒன்றிணைத்து அவர்கள் சமய, சமூகப பணிகளில் ஈடுபடுவதற்காக திரு. ஜோஜ் வில்லியம்ஸ் என்பவரால் 1844 ம் ஆண்டில் நிறுவப்பட்ட ஸ்தாபனமே இன்று வை. எம். சி. ஏ. ஸ்தாபனமாக வளர்ச்சிபெற்று உலகின் சகல நாடுகளிலும் சேவையாற்றி வருகிறது"

இவ்வாறு யாழ் வை. எம். சீ. ஏ. ஸ்தாபனம் றேட்டரிக் கழகத்தின் ஆதரவுடன் யாழ். பரி. யோவான் கல்லூரியில் நடாத்திய 20வது வருடாந்த 4 நாள் பாசறையின் இறுதி நாள் நிகழ்ச்சியில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட பொறியியலாளர் திரு. ஏ. ஜெயவீரசிங்கம் பேசுகையில் குறிப்பிட்டார்.

யாழ். வை. எம். சி. ஏ. ஸ்தாபனத் தலைவர் திரு. எம். சி. பிரான்சிஸ் தலைமையில் நடைபெற்ற பரிசளிப்பு வைபவத்தில் திரு. ஜெயவீரசிங்கம் தொடர்ந்து பேசுகையில், "யாழ்ப்பாண வை. எம். சி. ஏ. ஸ்தாபனம் அன்று வடமாகாண அரசாங்க அதிபராகப் பணிபுரிந்த திரு. வில்லியம். ரெய்மன் என்பவரால் 1890ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. 1884ம் ஆண்டில் யாழ்ப்பாணக் கல்லூரியில் இளைஞர் வை. எம் சி. ஏ. ஸ்தாபனம் என்ற பெயரில் நிறுவப்பட்டது.

இந்த ஸ்தாபனம் யாழ்ப்பாணத்தில் உடுவில், நவாலி ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டு வளர்ச்சியடைந்து வந்ததுடன், இன்று இன்னும் பல இடங்களில் இது நிறுவப்பட்டு செயலாற்றி வருகிறது. இந்த ஸ்தாபனம் இளைஞர்கள் மட்டுமல்ல வயதுவந்தவர்களினதும் உடல், உள்ளம், ஆவி, என்பவைகளின் வளர்ச்சிக்காகச் செயலாற்றி வருகிறது. இதனில் நாம் அங்கத்துவம் பெறுவதன் மூலமும், இதனோடு செயல்படுவதன் மூலமும் நாமும், நாடும் சமூகமும் நன்மைபெறும் என்று குறிப்பிட்டார்.

யாழ். வை எம். சி. ஏ. ஸ்தாபனத் தலைவர் திரு. எம். சி. பிரான்சிஸ் தனது தலைமையுரையில், நாட்டிலுள்ள மொத்தச் சனத் தொகையில் 30 வீத மானவர்கள் இளைஞர்களாவர். இவர்களில் பெரும்பாலானோர் பாடசாலைக்குச் செல்லும் வயயுடையவர்கள். இது போன்ற விடுமுறைப்பயிற்சி முகாம்களில் கலந்து கொள்வதன் மூலம் அநேக புதிய காரியங்களைக் கற்றுக் கொள்ள வாய்ப்பும் வசதியும் ஏற்படுகிறது.

யாழ். வை. எம். சி. ஏ. ஸ்தாபனத்தில்சுமார் இருநூறு மாணவர்கள் அங்கத்துவம் பெற்று தினமும் பல விதமான விளையாட்டுக்களில் பயிற்சி பெற்று வருகிறார்கள். வை. எம். சி. ஏ. யின் விளையாட்டுப் பிரிவை விஸ்தரிக்க பழைய பூங்கா வளவில் ஒரு பகுதியை எமது பாவனைக்காகப் பெற்றுக் கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது" என்று குறிப்பிட்டார்.

நிகழ்ச்சிகளில் வெற்றிபெற்ற மாணவ - மாணவிகளுக்கான பரிசில்களை திரு. ஜெயவீரசிங்கம் வழங்கினார். பாசறைப் பொறுப்பாளர் திரு. யே. என். பொன்னையா நன்றியுரை நிகழ்த்தினார்.

### பாவனையாளர் சங்கம்

சுண்டுக்குளி வட்டாரப் பாவனையாளர் பாதுகாப்புச் சங்கக்கூட்டத்தில் பின்வருவோர் நிர்வாகிகளாக ஏகமனதாகதெரிவுசெய்யப்பட்டனர். தலைவர்; திரு. டீ. ஏ. எம். குணசிங்கம் உப. தலைவர் திரு எம் ஈ. ஜேர்ச், செயலாளர், திரு. ஏ. தங்கராசா, உப. செயலாளர், திரு. வ. அருமைநாயகம், பொருளாளர் திரு. அ. ம. ரவீந்திரன்.

## பெற்றோர் தம் கடமைதனை உணர்தல் மிக அவசியம்

(காரைநகர்)

"பெற்றோர் பிள்ளைகளைப் பாடசாலைகளுக்கு அனுப்பி வைப்பதோடு மாத்திரம் நின்று விடாது பாடசாலை வளர்ச்சியிலும் அக்கறை செலுத்த வேண்டும்."

இவ்வாறு காரைநகர் மெய்கண்டான் வித்தியாலயத்தில் ஆசிரியர், மாணவர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட பொருட்காட்சியை வைபவரீதியாக குத்து விளக்கேற்றி ஆரம்பித்து வைத்து உரையாற்றிய காரைநகர் மேற்கு இணக்க சபைத் தலைவர் திரு. ஆ. தேவராசா குறிப்பிட்டார்.

பாடசாலை அதிபர் திரு. கி. சிவமணி தலைமையில் நடைபெற்ற இப் பொருட்காட்சி வைபவத்தில் திரு. ஆ. தேவராசா தொடர்ந்து உரையாற்றுகையில் "பத்து ஆசிரியர் இருக்க வேண்டிய இருநூற்று இருபது மாணவர்களைக் கொண்ட இப்பாடசாலையில் அதிபரை விட இரண்டு ஆசிரியர்களே கற்பிக்கிறார்கள். பெற்றோர்கள் முன் வந்து கல்வியதிகாரிகளிடம் சென்று முறையிட்டாலொழிய இப்பாடசாலையின் ஆசிரியர் பற்றாக்குறை தீர வழி பிறக்காது" என்றார்.

ஆயுள் வேத வைத்தியர் திரு. க. சோமசுந்தரம் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினார். ஆசிரியர் திரு. சீ. நவரத்தினம் நன்றி நவின்றார். தொடர்ந்து இரு தினங்கள் பொருட்காட்சி நடைபெற்றது

## சுகாதார வழி முறை பேணினால் ஆரோக்கிய வாழ்வு உறுதி

(வேலணை)

"ஆரம்ப சுகாதார வாழ்வைப் பொதுமக்கள் கடைப்பிடித்து வந்தால் ஆரோக்கியமாகவும், நீண்ட ஆயுளுடனும் வாழமுடியும். நோய்கள் எவ்வாறு தொற்றிக் கொள்கின்றன, அவற்றை எப்படித் தவிர்த்து கொள்வது என்பதை ஒவ்வொருவரும் அறிந்திருப்பது அவசியம். இன்றைய நெருக்கடி மிக்க சூழ்நிலையில் எம்மை நாமே காத்துக்கொள்ளுதல் நல்லது."

மேற்கண்டவாறு வேலணை மேற்கு ஆறும் வட்டாரத்தில் நிறுவப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தை திறந்து வைத்து உரையாற்றிய வேலணை உதவி அரசாங்க அதிபர் செல்வி. மைதிலி சோமசுந்தரம் குறிப்பிட்டார்.

திரு. நா. வீரசிங்கம் தலைமையில் நடைபெற்ற இத் திறப்பு விழா வைபவத்தில் செல்வி. மைதிலி சோமசுந்தரம் தொடர்ந்து உரையாற்றுகையில் நோய் வந்தபின் காப்பதைவிட வருமுன் காப்பதே மிகச் சிறந்ததாகும். இவ்வாறான ஆரம்ப சுகாதார நிலையங்கள் மக்களுக்கு சுகாதார வசதிகளையும், சுகாதாரப் போதனைகளையும் வாங்க முன் வர வேண்டும். இந்நிலையத்தின் சேவையை வேலணை மேற்குப் பகுதி மக்கள் தகுந்த முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்" என்றார்.

திரு. நா. வீரசிங்கம் தமது தலைமையுரையில்: "வேலணை மேற்குப் பகுதி மக்களின் நீண்டநாள் குறைபாடு இந்நிலையம் நிறுவப்படுவதன் மூலம் நிவர்த்தியாகின்றது. இப்பகுதி மக்கள் ஆரம்ப சுகவாழ்வை எப்படிப் பெறுவதென்பதை அறிந்து அதன்படி நடந்துகொள்ளுதல் வேண்டும். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்னும் முதுமொழியை கடைப் பிடித்து நோய் அணுகாதவர்களாகவும் நீண்ட ஆயுளுடையவர்களாகவும் வாழவேண்டும்" என்றார்.

வேலணை மேற்கு ஆரம்ப சுகாதார உத்தியோகஸ்தர் செல்வி பாலாம்பிகை பேசும் போது, "உங்களுக்கு எந்த விதமான சுகாதார குறைபாட்டையும் போக்குவதற்கும் ஆலோசனைகளை சொல்லித் தருவதற்கும் இச் சுகாதார நிலையம் என்றும் தயாராக உள்ளது" என்று குறிப்பிட்டார்.

## நத்தார் வாழ்த்து

கிறிஸ்மஸ் என்றால் கொண்டாட்டம்தானே! பெரியவர், சிறியவர் என்ற வேறுபாடின்றி அனைவருக்குமே கிறிஸ்மஸ் கொண்டாட்டத்தில் மகிழ்ச்சி.

நத்தார் வாழ்த்துக்கான கார்ட்டுகளை நண்பர்கள், உறவினர்களுக்கு அனுப்புவது கிறிஸ்மஸ் கொண்டாட்டத்தில் ஒரு முக்கியமான அம்சமாகும். அநேகமாக ஆங்கிலத்தில் அச்சடிக்கப்பட்ட நத்தார் வாழ்த்துக்களே எம்மவர் மத்தியிலும் அனுப்பப்படுவதே வழக்கம்.

ஆனால் இதில் ஒரு புதுமையைப்புகுத்தி, சாதனை புரிந்துள்ளார் கவிஞர். சத்தியசீலன் 'நத்தார் வாழ்த்து-சிறுவர் பாடல்' என்ற பெயரில் பதினாறு பக்கங்களில், கண்ணைக் கவரும் வண்ணப்படங்களுடன் சிறு பிரசுரமொன்றை வெளியிட்டுள்ளார். தங்கத்தமிழில், சிறுவர்க்கான சித்திரங்களுடன், நவீனமான நத்தார் வாழ்த்து சத்தியசீலனின் மன எண்ணத்தின் கைவண்ணமாக மலர்ந்துள்ளது.

கடைகளில் விற்பனையாகும் நத்தார் வாழ்த்து கார்ட்டுகளிலும் பார்க்க மலிவு விலையில், பெறுபவர்கள் படித்துப் பயன் பெறும் வகையில் இது உருவாகியுள்ளது பாராட்டுதற்குரியது.

தமிழில் ஒரு புதுமை; அனைவரும் வரவேற்பர் என்பது திண்ணம்.

—தீன

### உதய சிந்தனை

சமத்துவம் என்பது எல்லாருக்கும் ஒரே விதமான கடமைகளுண்டு என்பதை அங்கீகரிப்பதல்ல. எல்லோருக்கும் ஒரே விதமான உரிமையுண்டு என்பதை அங்கீகரிப்பதாகும்.

-மாஜினி

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 23336

இதய ஒலி

19-12-85 வியாழக்கிழமை (குரோதன) மார்கழி-04

# புத்திசாலிகள் அறிய மாட்டார்களா?

“வடக்குக் கிழக்கிலுள்ள தமிழ் இளைஞர்கள் தங்கள் உரிமைகளுக்காகப் போராடுவது முட்டாள்தனமான செயல்.”

இவ்வாறு அழுத்தம் திருத்தமாகக் கூறியிருப்பவர் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன அவர்கள்.

ஜனாதிபதியின் இந்தப் பேச்சை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தனது செய்தியறிக்கையில் விபரமாகத் தெரிவித்திருந்தது.

மருதானையில் இஸ்லாமிய கலாசார நிலையத்திறப்பு விழாவில் நேற்று முன்தினம் ஜனாதிபதி அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு பேசியுள்ளார்.

“இந்நாட்டின் சிறுபான்மையினங்களுக்குச் சகல உரிமைகளும் வழங்கப்பட்டு விட்டன; தமிழினத்துக்கு வேண்டிய சகல உரிமைகளுமுண்டு; இந்த நிலையில் தமிழ் இளைஞர்கள் உரிமைக்காகப் போராடுவது முட்டாள்தனமான செயல்” என்று ஜனாதிபதி இங்கு தெரிவித்துள்ளார்.

இந்நாட்டின் மக்களால் தெரிவு செய்யப்பட்ட சகல நிறைவேற்று அதிகாரங்களையும் தன்னகத்தே கொண்ட தலைவராக அவர் இருப்பதால், அவரது பேச்சை விமர்சிப்பது, பொய் என்று சொல்லுவது சட்டப்படி தவறாக இருக்கலாம்.

எனவே அவரது கூற்றை விமர்சிக்க நாம் விரும்பவில்லை.

ஆனால் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள சில சந்தேகங்களையும், பிரச்சினைகளையும் இங்கு முன்வைக்க விரும்புகிறோம்.

டாக்கா மாநாட்டிலிருந்து திரும்பி வந்த கையோடு, “ஐலன்ட்” ஆங்கிலப் பத்திரிகைக்கு ஜனாதிபதி அவர்கள் அளித்திருந்த பேட்டியில் தெரிவித்த சில விடயங்கள் இங்கு நினைவுக்கு வருவது தவிர்க்க முடியாதது.

“தமிழ்மக்கள் என்ன வேண்டும் என்று கேட்கிறார்கள்? திரு. அமிர்தலிங்கம் என்ன வேண்டுமென்று கேட்கின்றார்?” என்று தெரிவித்திருந்த, ஜனாதிபதி, விடுதலைப் போராளிகளைப் (FREEDOM FIGHTERS) பார்த்து கொலைகாரர்கள் என்றும் வர்ணித்திருந்தார்

அவர்கள் பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண இணங்கா விட்டால், அவர்களை ஒழித்துக்கட்டுவதைத் தவிர வேறு வழியில்லை என்றும் சொல்லியிருந்தார்.

மாக்ஸிஸ பயங்கரவாதிகள் என்று தேசிய பந்தோபஸ்து அமைச்சரினாலும், தேசிய செய்தி ஸ்தாபனமான லங்கா புவத்தினாலும் வர்ணிக்கப்படும் விடுதலைப் போராளிகள், ஜனாதிபதியின் பார்வையில் கொலைகாரர்களாகத் தென்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் பகிரங்க வைபவத்தில் பேசும்போது அதே இளைஞர்களை உரிமைக்காகப் போராடுபவர்களென்றும், அவர்கள் முட்டாள்தனமான செயல்களில் ஈடுபட்டுள்ளனர் என்றும் ஜனாதிபதி அவர்கள் குறிப்பிட்டுள்ளது, முன்னைய நிலைகளிலிருந்து அவர் சற்று விடுபட்டு வருகிறார் என்பதை உணரவைக்கின்றது.

இளைஞர்கள் முட்டாள்தனமான செயல்களைச் செய்கிறார்களென்றால், அவைகளைத் தடுப்பதற்கு ராணுவத்தினதும், கவச வண்டிகளினதும் தொகையை தமிழீழப் பகுதிகளில் அதிகரிக்கச் செய்வதுதான் சரியான மருந்தா?

இரு தினங்களுக்கு முன்னர் வடக்கு நோக்கி வந்த வண்டிகளின் பவனி, கடந்த வாரம் சென்னையில் ஈழம் தேசிய விடுதலை முன்னணி விடுத்த எச்சரிக்கையை நிரூபிப்பதாக இல்லையா?

போராளிகளுக்கு எதிராக பாரிய தாக்குதலை நடத்த அரச படைகள் தயாராவதாக தெரிவதை எவரும் மறுக்க முடியுமா?

இவ்வாறான ஒரு நிலையில் விடுதலைப்போராளிகள் என்ன செய்ய முடியும் என்று அரசாங்கம் எதிர்பார்க்கின்றது?

டில்லி பேச்சுவார்த்தைகளை மீண்டும் தொடக்கி, அரசியல் தீர்வுகாண்பதில் அக்கறை காட்டினால், தமிழ் இளைஞர்கள் “முட்டாள்தனமான” செயல்களை நிறுத்துவார்கள் என்பதை. ‘புத்திசாலிகளான’ ஆட்சியாளர்கள் அறியமாட்டார்களா?

---

**தந்திரோபாயத்தின் மூலவேர்**
**இந்தியாவைப் பயனற்ற தாக்குதல்....**

# பலப் பிரயோகத்துக்கு கொழும்பு கங்கணம்

தமிழர் விடுதலைப் போராளித் தலைவர்கள் இருவர் இந்தியாவைவிட்டு நாடு கடத்தப்பட்டதையிட்டுப் புதுடெல்லி வழமைக் குளறுபடியான ஒரு நிலைக்கு ஆளானமையால், தமிழர் விடுதலை கெரில்லாக்களுக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில் திம்பு நகரில் நடைபெற்ற இணக்கப்பேச்சுவார்த்தைகள் முறிந்தன.: முழு அளவிலான ஓர் உள்ளூர் போர்ப் பிரமாணங்களுக்கு இலங்கைத் தீவில் துரிதமாக மனித இனப் பிணக்குக் காரணமான அத்தீவின் பொதுவான நிலைமையைக் கவ்வியிருக்கும் மந்தார மேகங்களை இது மேலும் இருண்டன ஆக்குகிறது. திம்பு உரையால்களைச் சம நிலையில் பேணி நடத்திச் செல்வதற்கு எவ்வளவுதான் புதுடில்லி பகீரதப் பிரயத்தனம் மேற்கொண்ட போதிலும், அவை வெற்றியில் முடிவுறும் சாத்தியக் கூறுகள் நாளுக்கு நாள் அருகிக் கொண்டே போகின்றன.

இலங்கையின் சிப்பாய்கள் என்ற பெயர்மேற்கொண்டு அத்தீவிற் தங்கு தடையின்றிப் பெருகியவண்ணமாக உள்ள இரத்த ஆற்றுக்கு முக்கிய காரணரான மிருகத்தனமான கும்பல்களின் தீச்செயல்களுக்கு அருகாமையில் நிகழும் வெறும் பயனற்ற ஒரு சிறு கோமாளிக்கூத்தாகும். அபாய நிலைக்குத் திம்புப் பேச்சுக்கள் செல்லக் கூடும் என்பது உண்மையானால், அதற்குக் காரணம், படைக்கலமேந்தி சர்ச்சையைத் தீர்த்துக் கொள்ளப் பகைச் சாரார் இருபேரும் முழுமூச்சாகக் கங்கணம் கட்டி நிற்பதே ஆகும்.

அப்படித் தயாராதலிலும் கூட, வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள், சர்வதேச மன்னிப்புச் சபைபோன்றஅனைத்து நாட்டு மனிதாபிமானத் தாபனங்கள் முதலியவற்றினால் தனித்தனியே சேகரிக்கப்பட்டு முன்வைக்கப்பெற்றுள்ள சான்றுகளைக்கொண்டு நோக்கினால், ஜூப் பொல்லாங்குகளுக்கான பிரதானகுற்றவாளி கொழும்பு அரசாங்கமே என எண்ணத் தோன்றுகிறது. யுத்த இடைநிறுத்த உடன்படிக்கை 1985, ஜூன் மாதம் பதினெட்டாந் திகதி கைச்சாத்தானமைக்கு இந்தியாவின் துணையே பெரிதும் உதவிற்று. ஆகஸ்ட் மாதம் பத்தொன்பதாம் திகதிய தமது செய்தி அறிவிப்பில் எமது கொழும்பு நிருபர் அளித்த தகவல்களின் படிக்கு, இவ்வுடன்பாடு எழுதப்பட்டமை உலர்ந்ததும் உலராததுமாக, இலங்கை இராணுவத்தின் சிப்பாய்கள் உடன்படிக்கையை மீறுவதில் ஈடுபட்டனர். தமிழர்விடுதலை கெரில்லாக்களும் அதற்குப் பதிலிறுக்குமுகமாக அப்படியே செய்தனராயினும், திம்பு வாயிலாக ஈழம் என்பதற்குச் சற்றே குறைவான அடுத்த படியிலுள்ள அவர்களது சுயாட்சி நாட்டம் உண்மையானது.

தமிழர் விடுதலை முன்னணித் தலைவர்களோடு, தமிழர் விடுதலைப் போராளி இயக்கங்களும் பெற முனைந்து வருவது, பெரும்பாலும் தமிழர் அதிகமாக வாழ்ந்துவரும் இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு ஓரளவு சுயாட்சியாகும். அத்துடன், அவையிரண்டினதும் இணைப்புத்தான் இல்லாவிட்டாலும், குறைந்த பட்சம் அவற்றுக்கிடையில் தொடர்பாவது வழங்கப்பெறுதல் வேண்டும் எனவும் அவர்கள் கோரி நிற்கின்றனர். இணக்கப் பேச்சுகளின் ஆரம்பத்தில் ஏதாவதொரு தீர்வுக்குரிய பொதுச் சட்டக் கோப்பாக அவர்கள் முன் வைத்தவை நான்கு அடிப்படைக் கோட்பாடுகள் என்பது உண்மைதான். அவை தமிழரின் அரசியல், கலாச்சார தனித்துவத்தைப் பொதுவாக வலியுறுத்தும் பாங்கில் அமைந்திருந்தன. அவை தவிர, நடை முறையில் ஏற்றுக் கொள்ளும்படி தமிழரை மனம் மாறவைத்தற்கும், இலங்கையின் ஒருமைப்பாட்டிற்குச்சாதகமானவற்றுக்கும், முரணான எந்தவொரு நிபந்தனையாவது இந் நான்கு தத்துவங்களுள் இடம்பெற்று இருக்கவில்லை

கம் சற்று முன் இடம் பெற்ற மேற்கு நாடுகளுக்கு முரணான அமைப்பு உடையதாக இருந்தமையால், அதன் மாட்டு அவை எந்த அளவுக்குப் பகைமை பாராட்டி வந்தனவோ, அதேயளவுக்கு 1977 ஆம் ஆண்டுமுதல் ஆட்சி பீடம் அமர்ந்திருக்கும் ஜெயவர்த்தன அரசின்மீதும் அதன் மேற்குச் சார்பான கொள்கைகள் மீதும் அவை ‘மையல் கொண்’டுள்ளன. தமிழ் நாட்டின் ஓங்கிவரும் உள்ளூர் நெருக்குதலுக்கு இடமளியாதிருக்குமாறு இந்தியாவைத் தடைசெய்யும் என இந்நாடுகளைத்தான் இலங்கை நம்பியிருக்கிறது இலங்கைத் தீவில் சிறுபான்மைச் சனத்தொகையினராக வாழ்ந்துவரும் தமிழ் மக்கள்மீது புரியப்படும் தொல்லைகளையிட்டு அனைத்துலக மனிதாபிமானக் கிலேசம் வரவர வளர்ந்துவருவதும் இவ்விந்திய நெருக்குதலுக்குப் பக்கபலமாக விளங்குகிறது.

> “ரைம்ஸ் ஆப் இந்தியா”வில் 1985 ஆகஸ்ட் 30ம் திகதி வெளியான இக்கட்டுரை இப்போதைய சூழ் நிலையிலும் பொருத்தமாகவிருப்பதால் இதனை மொழிபெயர்த்து வெளியிடுகின்றோம்.

துர்ப்பாக்கியவசமாக, இலங்கையர் அரசாங்கமானது திம்பு நகரில் வைத்து முகமன் வார்த்தையாடலில் அக்கறை கொண்டுள்ளதாக வெளிக்காட்டிக் கொண்ட அறிகுறிகள் எல்லாம், ஓர் இராணுவத் தீர்வுக்குத் தன்னைத் தயாராக்கிக் கொள்வதற்குப் போதிய கால அவகாசம் உண்டாக்கும் நோக்கம் உடையனதாகவே இருந்தன.

இலங்கை அரசாங்கத்தின் தந்திர உபாயத்தினுள் அநேக நடவடிக்கைகள் அடங்கியுள்ளன: தமிழ் நாட்டுத் தளங்களிலிருந்து கெரில்லாக்கள் இயங்குதற்கு எதிராக நடவடிக்கையில் இறங்கும்படி புதுடெல்லியை நெருக்குதல், இணக்கப் பேச்சுகளின் போது போராளிகளின் கோரிக்கைகளை மேன் மேலும் குறைத்துச் செல்ல வைக்குமுகமாக, புது டெல்லியைக் கொண்டு போராளிகளைப் பலவந்தப் படுத்துவித்தல், கிளர்ச்சியாளர்களைப் புது டெல்லிக்கு முரணாக மோத வைத்தல், அடிக்கடி ‘தலையீடு’ என்ற பூச்சாண்டி காட்டி இந்தியாவைத் தற்காப்பு மறுத்துரைப்புக்கு உள்ளாக்குதல், பாரத தேசத்தின் உள்ளிருந்து வரும் தமிழ் நாட்டு நெருக்குதல்களுக்கு இடங் கொடாதிருக்கும்படி, இலங்கைக்கு உதவிக் கொடைகள் வழங்கும் மேற்குநாடுகள் பாரதத்தை தடுக்கும் என எதிர்பார்த்திருத்தல் முதலாயின அந் நடவடிக்கைகளுள் அடங்கும். இலங்கையின் இக் கபடத்தை, இரட்டை வேஷத்தை இந்தியா காண முடியாதிருக்கிறது அல்லது காண மாட்டாதிருக்கிறது.

1977 ஆம் ஆண்டுக்கு முன்பு இலங்கையை ஆண்ட திருமதி பண்டாரநாயக்காவின் அரசாங்

இத்தமிழர் விடயத்தில் இராணுவ ரீதியாகத் தலையிட்டு, மத்தித்தரைக் கடற் பிராந்திய சைப்பிரஸ் தீவில் ஏற்பட்டது போன்ற ஒரு தீர்வைப் பிரயோகிக்கும் வண்ணமே தமிழ் நாடு இந்தியாவை நெருக்குகிறது.

இலங்கையின் இந்த இரட்டை வேடக் கபட அணுகுமுறைக்கு, நியாயமாக இருப்பது போன்ற ஒரு வெளித்தோற்றம் அத்தியாவசிய முக்கியத்துவம் வாய்ந்தது. ஆகையால், இனப் பிரச்சினையினின்றும் விடுபட ஒரேயொரு வழி அரசியல் தீர்வுதான் என்ற புதுடெல்லியின் கருத்துடன் இலங்கை அரசாங்கம் பகிரங்கமாக உடன்பட்டுக்கொண்டு, புது டெல்லி ஒழுங்கு செய்துள்ள தமிழர் பிரதிநிதிகளுடனான பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றிக்கொண்டே செல்கிறது.

யுத்த இடை நிறுத்தம், அட்டவணைப்படிக்கு 1985, செப்டெம்பர் பதினெட்டாம் திகதி வரை வலுவிலுள்ளது. உண்மையில் இலங்கை அரசின் கொள்கை, யுத்த இடைநிறுத்தத்தைத் தகாதவாறு பயன்படுத்தி அந்த அவகாசத்தினுள் இலங்கைப் பந்தோபஸ்துப் படைகளைப் பலப்படுத்திக் கொள்வதோடு, உருப்படியான எதனையுமே வழங்காமல், திம்புப் பேச்சுக்களை முடிவின்றி நீளத் திரித்துக் கொண்டே செல்கையில் தமிழர் விடுதலை கெரில்லாக்களுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்வதுமாகும். தமிழர் விடுதலை கெரில்லாத் தலைவர்கள் தங்களை முற்றாகத் திம்பு உரையாடல்களில் ஈடுபடுத்தி இருக்கின்றமையால், அவர்கள்

-5ம் பக்கம் பார்க்க

★ மாநிலத்து மருத்துவ நிபுணர்களையே மலைப்புக்குள்ளாக்கும் 'எய்ட்ஸ்' நோயை ஒழிக்க

# உலக சுகாதார ஸ்தாபனம் விரிவான திட்டம்:

# விரைந்து செயற்பட முனைவு!

(லண்டன)

மருத்துவத்துறை ஆராய்ச்சியாளர்களைப் பெரும் பிரச்சனைக்குள்ளாக்கி புதிரைக் கண்டு பிடிக்க முடியாத இறுக்கத்தை அவர்களுக்கு அளித்து வரும் 'எய்ட்ஸ்' நோயை ஒழிப்பதற்கு உலக சுகாதார ஸ்தாபனம் விரிவான திட்டம் ஒன்றைத் தயாரித்துள்ளது. இந்தவகையில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகள் மூலம் வெளிவந்த தகவல்கள் தொண்டர்கள் மூலம் மக்கள் மத்தியில் பிரசாரம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படுள்ளது.

மேற்படித் தொண்டர்கள் மூலம் இந்நோயினால் விளையக் கூடிய ஆபத்து பற்றிய விளக்கம் மக்கள் மத்தியில் பரப்பப் படவுள்ளது.

தன்னினச்சேர்க்கையும், போதைப் பொருள் பாவனையுமே இந்நோய் தோன்றுவதற்கு வித்திடுவதாகக் கருதப்படுகிறது.

இந்நோயினால் உலகம் முழுவதிலும் இருபதாயிரம்பேர் வரை பீடிக்கப்பட்டுள்ளதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

தன்னினச் சேர்க்கையும், போதைப் பொருள் பாவனையும் இந்நோய் உண்டாக வழி கோலுகின்றன என்றும் இயற்கை எதிர்ப்பு சக்திகள் ஒழிந்து விடுகின்றன என்றும் மருத்துவ வட்டாரங்கள் அபிப்பிராயம் வெளியிட்டுள்ளன.

யூகோஸ்லேவியாவும், சீனாவும் தத்தம் நாட்டில் தலா ஒருவர் பீடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளன. குணமாக்கவே முடியாத தன்மை இந்நோயில் உள்ளது.

இந்நோய் தொடர்பான மத்திய ஆராய்ச்சி நிலையமாக உலக சுகாதார ஸ்தாபனம் செயற்படவுள்ளது.

சமீபத்தில் பிரபல ஹொலிவூட் நடிகர் ரொக்ஹட்ஸன் மடிந்ததும் இந் நோயினால் தான் என்பது குறிப்பிடத் தக்கது.

## அஸாம் முதல் மந்திரி தலைதப்பியது; புதுடில்லியில் இ. கா. கோட்டை ஸ்திரம்

(புதுடில்லி)

மிக முக்கியம் வாய்ந்ததெனக் கருதப்பட்ட தெற்குப் புதுடில்லித் தொகுதியில் இந்திரா காங்கிரஸ் வேட்பாளரான வர்த்தக மந்திரி திரு. அர்ஜுன்சிங் மகத்தான வெற்றியீட்டியுள்ளார்.

இவருக்கு ஒரு இலட்சத்து அறுபதாயிரம் வாக்குகள் கிடைத்தன.

எதிர்க்கட்சி வேட்பாளரை நாற்பதாயிரம் அதிகப்படி வாக்குகளால் இவர் வென்றார்.

அஸாமில் நடைபெற்ற தேர்தலில் முதல் மந்திரி திரு. ஷைக்யா வெற்றி பெற்றுள்ளார். நஸீரா தொகுதியில் இவர் வெற்றியீட்டினார்.

## பலப் பிரயோகத்...

—4ம் பக்கத் தொடர்ச்சி

'கைகள் கட்டப்பட்டது போன்ற' ஒரு நிலையில் இலங்கைத் தீவுக்கு வெளியே உள்ள போது இவ்விராணுவ நடவடிக்கைகள் மிக வாய்ப்பானவையாக இருக்கும். அதனிலும் பார்க்க முக்கியமான வகையில், திம்பு நகரில் தீர்வொன்றைநாடி முயற்சி நடைபெற்று வருகையில், புதுடெல்லி அரசு தேவையின்றித் தனது அந்தஸ்தை அத்துடன் சம்பந்தப்படுத்திக் கொண்டது. இப்புது டெல்லியின் கட்டுப்பாட்டிற்கு அமைந்தவர்களே கெரில்லாக்கள்.

இங்ஙனமாக மிக முன்னரேயே ஏற்றுக் கொள்ளப்படுதற்குப் போதியனவல்ல எனத் தமிழர் பிரதிநிதிகளால் காணப்பட்ட இலங்கை அரசின் அதே பழைய பிரேரணைகளை திரு ஹெக்டர் ஜெயவர்த்தன இரை மீட்டு, மீண்டும் திம்பு மாநாட்டு மேசை மீது கக்கியவாறாக இருக்கையில், இலங்கைத் தீவில் தமிழரின் கிளர்ச்சியை திரும்பவும் தலைதூக்காதபடி ஒரேயடியாகக் காலடிக்குக் கொண்டு வந்து பணியவைத்தலை இலக்காகக் கொண்ட உக்கிரமாக்கப்பட்ட ஒரு பிரயத்தனமாக, இலங்கை இராணுவமானது தமிழர் விடுதலைக் கெரில்லாக்கள், தமிழ் குடிசனங்கள் ஆகியோர் மீது திருகோணமலை, வவுனியா, முதலாம் பிராந்தியங்களிலும் ஏனைய பிரதேசங்களிலும் தாக்குதல்களை அவிழ்த்து விட்டபடிபடியாக இருந்தன.

(தொடரும்)

விழாக் காலச் சலுகை!

15-12-85—30-1-86 வரை




விபரங்களுக்கு உடன் தொடர்பு கொள்ளுங்கள்

தனித்துவமான 36% வட்டி

முதிர்வுநிலை வைப்புகளுக்கு வழமைபோல் நீங்கள் பெறலாம்

நம்பிக்கை! நாணயம்! பாதுகாப்பு!

யாழ்-தமிழர் நிதியம்

140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 22437

(மனோகரா தியேட்டருக்கு அருகாமையில்) (பி 947)

19 . 12 . 85 வியாழக்கிழமை

# ஈழமுரசு

## சடலத்தை குழியிலிருந்து மீட்டு பட்டுவேட்டி, சங்கிலி அபேஸ்!

சவக்குழிக்குள் புதைக்கப்பட்ட ஆணின் சடலமொன்று, அன்றிரவே வெளியே எடுக்கப்பட்டு சடலத்துக்கு அணியப்பட்டிருந்த பட்டு வேட்டி, கழுத்திலிருந்த தங்கச் சங்கிலி, சடலத்துடன் சேர்த்துப் புதைக்கப்பட்ட ஐயாயிரம் ரூபா பணம் ஆகியவை கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் மாதம்பிட்டிய சவக்காலையில் நடைபெற்றது. அண்மையில் கொழும்பில் சுட்டுக்கொல்லப்பட்ட பிரபல வர்த்தகரான 'கஞ்சா' செல்லையாவின் சடலத்துக்கே இந்த கதி ஏற்பட்டது. இறுதிக் கிரியைகளின் பின்னர் சடலம் புதைக்கப்பட்ட அன்றிரவே இவை கொள்ளையடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அரசாங்கத்திடம் அவசர வேண்டுகோள்:

# தெற்கில் கைதான சகல அரசியல் கைதிகளின் பெயர் விபரங்களை பகிரங்கப்படுத்த வேண்டும்!

(கொழும்பு)

தென்னிலங்கையில் பல இளைஞர்கள் அரசியல் காரணங்களுக்காகவே கைதாகியுள்ளனர். தெரு வீதிகளிலும், தமது வீடுகளிலுமிருந்துதான் இவர்கள் கைதாகியுள்ளனர்; இவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இடங்கள் கூட அறிவிக்கப்படவில்லை என்று "அரசியல் கைதிகளுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்கென உருவாக்கப்பட்ட அமைப்பு" விடுத்துள்ள பத்திரிகை அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இவ் அமைப்பின் இணைப்பு அதிகாரியான சார்ள்ஸ் அபேசேகரா விடுத்துள்ள அறிக்கையில் முக்கிய விபரம் வருமாறு:

அவசரகால, பயங்கரவாத தடுப்புச் சட்டங்களின் கீழ் இவ்வாறு கைதானவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதால், மனிதருக்கு வழங்கப்படும் ஆகக் குறைந்த உரிமைகளும், பாதுகாப்பும்கூட இவர்களுக்கு இல்லை. உறவினர், நண்பர், வழக்கறிஞர்கள் கூடப் பார்வையிட முடியாதவாறு இவர்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் சித்திரவதை, உயிராபத்து ஏற்படினும் இவர்கள் தற்பாதுகாப்பற்றவர்களாகிவிடக்கூடும்.

அரசாங்கத்தின் புதிய சட்டங்கள் அவர்களுக்கு எதிரான வர்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்படலாமென்ற அபாயம் உருவாகின்றது.

இதனால் கைதான சகலரதும் பெயர்களைப் பகிரங்கப்படுத்துமாறும், உறவினர்கள், வழக்கறிஞர்களைப் பார்வையிட அனுமதிக்குமாறும் மேற்படி அமைப்பு அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

சித்திரக் கல்வி அதிகாரி பேச்சு:

## மாணவரின் உளத்தூய்மை, மனநிறைவுக்கு சித்திரம் உறுதுணையாக அமைகின்றது!

"இன்று எம் மாணவர்களில் சிலர் க. பொ. த. உயர்தர வகுப்பில் சித்திரத்தை ஒரு பாடமாக எடுத்து பல்கலைக்கழகத்திற்கும் சென்றுள்ளனர். இதனால் பல்கலைக்கழக கட்டட நிர்மாணத்துறை மாணவர்கள் பெரிதும் பயனடைவார்கள். அத்துடன் மாணவர்களின் உளத் தூய்மையையும், ஒழுங்கையும், மனநிறைவையும் வளர்ப்பதற்கும் சித்திரம் உறுதுணையாக உள்ளதென்பதையும் நாம் கருத்திற்கொண்டுசெயற்படவேண்டும்"

இவ்வாறு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும் சேவைக்கால சித்திர விசேட பயிற்சி வகுப்பிற்கு தலைமை தாங்கி உரையாற்றிய சித்திரக் கல்வி அதிகாரி கலாகேசரி ஆ. தம்பித்துரை தெரிவித்தார்.

வட மாநிலக் கல்வித் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இப் பயிற்சி வகுப்பில் நூறுக்கு மேற்பட்ட ஆசிரியர்கள் பங்குபற்றினார்கள்.

கலாகேசரி ஆ. தம்பித்துரை அங்கு தொடர்ந்து பேசுகையில், யாழ். பல்கலைக்கழகத்தில் நுண்கலைப் பிரிவில் இசை நடனம் ஆகிய துறைகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டால் இத் துறையில் மேலும் நாம் முன்னேற்றம் காணமுடியும் எனவும் கூறினார்.

பயிற்சி வகுப்பின் இறுதி நாளான வெள்ளிக்கிழமை பயிற்சியாளர்களின் கலைப் படைப்புக்கள் காட்சிக்கு வைக்கப்படும். வட மாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. எம். சிமியாம்பிள்ளையும் அன்றைய நிகழ்ச்சியில் கலந்து கொள்வார்.

## சென். பற்றிக்ஸ் ஒளி விழா

நான் சஞ்சிகையின் 12-வது ஆண்டு மலர் வெளியீட்டு விழாவும் ஒளி விழாவும் நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை 4-30 மணிக்கு யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

அருட்திரு. ஜெபநேசன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பேராசிரியர் கு.நேசையா விமர்சன உரையையும் பேராசிரியர் சி. சிவஞானசுந்தரம் (நந்தி) ஆய்வுரையையும் நிகழ்த்துவார்கள். டாக்டர் ஜே. பீ. சி. பிலிப் முதற் பிரதியைப் பெறுவார்.

பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் நாடகங்களும் இங்கு நடைபெறும்.

சாவகச்சேரியில்

## அதிபர் பற்றிய துண்டுப் பிரசுரம்

சாவகச்சேரித் தொகுதி மக்களின் சிந்தனைக்கு என்ற தலைப்பில், சாவகச்சேரித் தொகுதி மக்களால் சாவகச்சேரி இந்துக் கல்லூரி சம்பந்தமான துண்டுப் பிரசுரம் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

இக் கல்லூரியின் வளர்ச்சி கருதி கல்வி அமைச்சு ஒரு நிரந்தர அதிபரை நியமிக்க சாவகச்சேரியிலுள்ள கல்வி அதிகாரி ஒருவரின் பெயரை முன் வைத்தது. அப் பெயரை சிபார்சு செய்ய கல்விப் பணிப்பாளர் விரும்புகின்றார். பாடசாலை முன்னாள் அதிபர் எதிர்க்கின்றார். பாடசாலை அபிவிருத்திச் சபை செயலாளர் மறுக்கின்றார். ஆனால், அதிபர் தரத்தில் இல்லாத ஒருவர் தற்காலிக அதிபராக நியமனம் பெறுகிறார் எனவும் இங்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ராணுவ....

தலைக் கண்காணிப்புக்குழு தன் இறுதிக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

முகாம்கள் தற்போது அமைந்துள்ள இடங்களில் பந்தோபஸ்து நடவடிக்கை தற்போதைய சூழ்நிலைகளின் வரம்பினுள் அமைவதனால், பிரஜைகள் குழுவினரால் தெரிவிக்கப்பட்ட ஆலோசனை பற்றி கண்காணிப்புக்குழு எதனையும் அறிவிக்கமுடியவில்லை எனவும் தெரிவித்துள்ளது.

கச்சேரி....

வந்தவர்களுக்குரிய டிசம்பர் மாதத்திற்குரிய ஓய்வூதியம் 21ஆம், 22ஆம் திகதிகளான சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் கோட்டை கொடுப்பனவுக் காரியாலயத்தில் வைத்து வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இக் கொடுப்பனவு கடந்த 14ஆம், 15ஆம் திகதிகளில் வழங்கப்பட இருந்து பின்னர் ஒத்திவைக்கப்பட்டது தெரிந்ததே.

சிவில் ஓய்வூதியம் பெறுபவர்கள் சகலருக்கும் 21ஆம் திகதி சனிக்கிழமையும், விதவைகள், அனாதைகள் ஓய்வூதியம், ஆசிரியர், ஆசிரிய விதவைகள், படைக்கல சேவிதர்கள், படைக்கல சேவிதர்களின் விதவைகள் ஆகிய மற்றையோருக்கான ஓய்வூதியம் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் காலை 9 மணி முதல் நண்பகல் 1 மணி வரை வழங்கப்படும்.

யாழ்ப்பாண...

1ம் பக்கத் தொடர்

வெளியிட்டிருந்த செய்திபற்றியே மேற்படி ஸ்தானிகராலயம் இதனைத்தெரிவித்துள்ளது.

பெல் ஹெலிகொப்டர்கள், நேபாம் குண்டுகள் பொருத்தப்பட்ட யுத்த விமானங்கள், போக்குவரத்து விமானங்கள் உட்பட இருபது விமானங்கள் யாழ்ப்பாணத்திற்குச் சென்றதாக பி. ரி. ஐ. தெரிவித்தது.

இக்குற்றச்சாட்டில் எவ்வித உண்மையும் இல்லையென்றும் மலேஷியப் பிரஜைகள் எவரும் இலங்கையில் இத்தகைய நடவடிக்கையில் ஈடுபடவில்லையென்றும் மலேஷிய உயர் ஸ்தானிகராலயம் மறுத்துள்ளது.

சென்னையில் உள்ள மலேஷிய உதவித் தூதராலயமும் 'இந்து' பத்திரிகைக்கு இதே வித மறுப்பைத் தெரிவித்துள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

## யாழ். ஆஸ்பத்திரி நோயாளர் நலனைக் கவனிக்க சங்கம்

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி நோயாளர்களின் பல்வேறு தேவைகளையும் கவனிப்பதற்கென நலன்புரிச் சங்கமொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

பொது நிறுவனங்கள், தர்ம வள்ளல்கள், ஸ்தாபனங்கள் ஆகியவற்றுடன் தொடர்பு கொண்டு ஆஸ்பத்திரியிலிருக்கும் நோயாளர்களுக்குத் தேவையான உதவிகளைப் பெறுவதே இச்சங்கத்தின் முக்கிய நோக்கமாகும்.

சங்கத்தை விரிவுபடுத்தி மேலும் பலரை இச்சேவையில் ஈடுபடுத்துவதற்கான கூட்டமொன்று இம் மாதம் 23-ம் திகதி ஆஸ்பத்திரி மண்டபத்தில் நடைபெறும்.

கம்யூனிஸ்ட் பிரமுகர் சொல்கிறார்:

## இனப்பிரச்சினைத் தீர்வுக்கு பிரதேச சுயாட்சியே வழி

தேசிய இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமானால் வர்க்கப் போராட்டமும் இணைக்கப்பட்டு ஒரே சமயம் நடைபெற வேண்டும் என்று இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ். மாவட்டச் செயலாளர் திரு. பொன். குமாரசாமி மேற்படி கட்சியின் அங்கத்தவர் பொதுக் கூட்டத்தில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. குமாரசாமி தொடர்ந்து பேசுகையில், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தவரையில் இவ் இனப்பிரச்சினையை பிரதேச சுயாட்சி அமைப்பின் மூலம் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளையே அது மேற்கொண்டு வருகிறது என்றார்.

முதலாளித்துவ அமைப்பை அழித்தொழிக்காமல் தொழிலாளர்கள் சுரண்டப்படுவதை ஒழிக்க முடியாது. முதலாளித்துவ உற்பத்தி முறையை அப்படியே விட்டுவைத்துக் கொண்டு மாற்றம் செய்ய முற்படுவது நிச்சயமாக படுதோல்வியிலேயே முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

வட பிரதேச தொழிற் சங்க கூட்டுக் குழுவின் செயலாளர் திரு. எஸ். விஜயானந்தன் உட்பட மற்றும் பலரும் உரையாற்றினார்கள்.

படையினர்....

அறிக்கையில் சேர்க்க சக அங்கத்தவர்கள் இணங்கியதால் பிரச்சினை நீங்கியதாகத் தெரிய வந்துள்ளது.

யாழ்ப்பாணச் சம்பவ அறிக்கை நேற்று அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தின் சிவில் நிர்வாகம், பிரஜைகள் குழுக்கள் ஆகியவற்றுடன் படை அதிகாரிகள் தொடர்பு வைத்திருந்தால் பல பிரச்சினைகள் தீர உதவியாக இருக்குமெனவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய கருத்துப் பரிமாற்றமும், தொடர்பிணைப்பும் காணப்பட்ட இடங்களில் பல தடவை பிரச்சினைத் தீர்வுகள் காணப்பட்டன என குழுவிற்குத் தெரிய வந்ததாகவும் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போதை....

அவுஸ்திரேலிய அரசாங்கம் இவர்களுக்கு மன்னிப்பு அளிக்குமாறு மலேசியாவை கேட்டுள்ளது.

1975 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை முப்பத்திரண்டு பேருக்கு அங்கு போதைவஸ்து கடத்தல் குற்றத்துக்காக மரணதண்டனை விதிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது மேலும் பதின்மூன்று வெளிநாட்டவர்கள் மீது விசாரணை நடைபெறுகிறது.

## இரண்டாவது கொள்ளை

(மட்டுநகர்)

மட்டுநகர் கல்விக்கந்தோரில் இரண்டாவது தடவையும் கொள்ளை நடைபெற்றது. மோட்டார் சைக்கிள்கள், தட்டச்சு, ரோணியோ மெஷின்கள் நேற்று முன்தினம் மாலை கொள்ளையடிக்கப்பட்டன.

## கூட்டுக் குழு ஆராயும்

வடபிரதேச தொழிற் சங்கங்களின் கூட்டுக் குழு முன்வைத்துள்ள ஐந்து அம்சக் கோரிக்கையை வெகுஜனமயப்படுத்தி நடைமுறைப்படுத்த அரசைக் கோரும் நோக்குடன் வெகுஜனஅமைப்புக்களை உள்ளடக்கிய கருத்துப் பரிமாறல் ஒன்றை மேற்படி குழு ஞாயிற்றுக்கிழமை நடத்தவுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணிக்கு மலாயன் சங்கத்திலுள்ள இலங்கை ஆசிரியர் சங்க பணிமனையில் நடைபெறும்.

லொறிச் சாரதி....

தன் கணபதி (33) ஆகிய இருவருமே கத்தி வெட்டுக்கு இலக்கானவர்கள். பிந்திக் கிடைத்த செய்தியின் படி இரு கொள்ளையர்கள் பொலிஸாரால் பிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இராணுவத்...

டைக்குள்ளிலிருந்து ராணுவத்தினர் பதில் தாக்குதலையும், துப்பாக்கிச் சூடுகளையும் மேற்கொண்டபோதே வீரசிங்கம் மண்டபம் சேதமானதாக இங்குகுறிப்பிடப்பட்டுள்ளது.

"ஈழமுரசு" சாய்பாபா அடவர்டைசிங் அஸோசியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 87, கண்டி வீதி யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 19-12-85 வியாழக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 23336